**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ம் நாள் புதன்கிழமை**
**இ.ம.எண்.01/2021 in அ.வ.எண்.124/2015**

1. தம்மா நாயக்கர் (இறப்பு)
2. தொப்பாயி அம்மாள்
3. மல்லமநாயக்கர்
4. பழனிச்சாமி
5. கோபாலகிருஷ்ணன்
6. பெருமாள்
7. பொம்மராஜ்
8. கலாராணி ... மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1. பொம்மக்காள்
2. நாகம்மாள்
3. பெருமாள் நாயக்கர்
4. பரமசிவம் (இறப்பு) (Amended as per order in I.A.No.03/2025 dated.25.04.2025)
5. மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர்
6. வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை
7. வட்டாட்சியர், கடவூர் வட்டம்
8. முருகவேல்
9. நாகமுத்து (Amended as per order in I.A.No.03/2025 dated.25.04.2025)

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 07.01.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், 1,2,3,8 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கில் 28.11.2019ம் தேதி ஏற்பட்ட தள்ளுபடி உத்தரவை இரத்து செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**

1) மனுதாரர் இவ்வழக்கின் 6ம் வாதி. மற்ற மனுதாரர்களுக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கானது 28.11.2019 அன்று விசாரணைக்காக போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரர் ஆஜராக வேண்டுமென கூறி மனுதாரர் வழக்கறிஞர் கடிதம் எழுதி அனுப்பியதாகவும், மேற்படி கடிதம் தனக்கு கிடைக்கவில்லை என்றும் பின்னிட்டு வழக்கறிஞரை சந்தித்து விபரம் கேட்ட போது 28.11.2019 அன்று மனுதாரர் விசாரணைக்காக ஆஜராகாததால் இவ்வழக்கு தள்ளுபடியாகி விட்டதாக கூறியதாகவும், மேற்படி தவறு வேண்டுமென்றே நடைபெற்றதல்ல என்றும், எனவே மேற்படி தவறை மன்னித்து இவ்வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டுமென கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 1,2,8 மற்றும் 9ம் எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்</u>**

2) மனுவில் கண்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு மாறானவை. அசல் வழக்கு 28.11.2019 அன்று விசாரணைக்காக பட்டியலில் போடப்பட்டிருந்தது. மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மனுதாரர் தனக்கு வழக்கறிஞர் எழுதிய கடிதம் கிடைக்கவில்லை என்று சொல்லியுள்ளது ஏற்கத்தக்கதல்ல. வழக்கை வேண்டுமென்றே காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் தள்ளுபடிக்கு விட்டுவிட்டு எதிர்மனுதாரர்களுக்கு வீண் விரயம் ஏற்படுத்த இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>5 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

3) மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்களை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். இம்மனுவில் எவ்வித முகாந்திரமும், காரணமும் இல்லாததால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

5) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் தனக்கு வழக்கறிஞர் விசாரணைக்காக வர சொல்லி போடப்பட்ட கடிதம் கிடைக்கவில்லை என்றும், இதனால் தன்னால் இவ்வழக்கில் ஆஜராக இயலவில்லை என்றும் இம்மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தக்கதாக உள்ளது. மேலும் இம்மனுவானது உரிய காலத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இம்மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள், 1,2,3,8,9 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/—ஐ செலவுத்தொகையாகவும், 5 முதல் 7 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/—ஐ செலவுத்தொகையாக 28.01.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 29.01.2026.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

—இல்லை—

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

*********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**இ.ம.எண்.01/2021**
**in**
**அ.வ.எண்.124/2015**

**DRAFT / FAIR ORDER**

**D.D.21.01.2026**

*********************************